இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்

சட்டக்கற்கைகள் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம்- மட்டம் 3

இறுதிப் பரீட்சை - 2023/2024

LLU 3703 – இலங்கை சட்டங்களுக்கான அறிமுகம்

காலம்: மூன்று மணித்தியாலங்கள்

**திகதி:** 14th மே 2025 **நேரம்:** 01.30 - 04.30pm

**மொத்த வினாக்களின் எண்ணிக்கை எட்டு** (08)

ஏதேனும் **ஐந்து** (05) வினாக்களிற்கு மாத்திரம் விடையளிக்குக.

தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. நீங்கள் இலங்கையின் ஒரு புகழ்பெற்ற சட்ட அறிஞராக இருப்பதாக கற்பனை செய்து, நீங்கள் "இலங்கை சட்ட அமைப்பில் ஆங்கில சட்டத்தின் செல்வாக்கு" என்ற தலைப்பில் ஆண்டு ஆராய்ச்சி மன்றத்தில் இளம் ஆசிய ஆய்வாளர்களுக்காக ஒரு சொற்பொழிவு வழங்க அழைக்கப்பட்டுள்ளீர்கள்.

இந்த சொற்பொழிவுக்கான விரிவான வடிவமைப்பை உருவாக்குக. இச் சொற்பொழிவில் தொடர்புடைய வழக்கு உதாரணங்கள், சட்டப்பிரிவுகள், மற்றும் ஆங்கில சட்டத்தின் தாக்கத்தைக் காட்டும் பிற சட்டத்திட்டக் கூறுகளையும் உள்ளடக்குக.

**(20 புள்ளிகள்)**

2. பண்டாரா என்பவர், கண்டிய சட்டத்திற்கு உட்பட்டவன். 1980 ஜனவரி 2ஆம் திகதியன்று கண்டிய சட்டத்தின் கீழ் ரன் மாணிக்காவை திருமணம் செய்து கொண்டார். அவர்களின் திருமணம் மூலம் அவர்களுக்கு இரு பிள்ளைகள் இருந்தனர். எனினும், 1985 ஜூலை மாதத்தில், அந்த திருமண உறவு வலுவில் உள்ள போதே, பண்டாரா இஸ்லாமிய மதத்திற்கு மாறினான். அதன் பின்னர், குசுமாவை

இரண்டாவது மனைவியாக திருமணம் செய்து கொண்டார். அதன் பிறகு, 1991 செப்டம்பர் மாதத்தில், பத்திமாவை மூன்றாவது மனைவியாக திருமணம் செய்து கொண்டார். இச்சூழ்நிலை பல சட்டப் பிரச்சினைகளை எழுப்பியுள்ளது, குறிப்பாக பண்டாராவின் இரண்டாவது மற்றும் மூன்றாவது திருமணம் இஸ்லாமிய சட்டத்தின் கீழ் வலிதானவையா என்பது தொடர்பாக பல சட்டப் பிரச்சினைகளை எழுப்பியுள்ளது.

மேலே கூறப்பட்ட சூழ்நிலையை பகுப்பாய்வு செய்து, இஸ்லாமிய சட்டத்தின் கீழ் இரண்டாவது அல்லது அதற்குப் பிறகு நடந்த திருமணங்களின் வலிதானதன்மையை விளக்குக. உங்கள் விடையை தொடர்புடைய சட்டப்பிரிவுகள் மற்றும் வழக்கு உதாரணங்களுடன் விளக்குக.

**(20 புள்ளிகள்)**

3. இலங்கையின் சட்ட அமைப்பில், திருமணம், மரபுரிமை மற்றும் சொத்து உரிமைகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களை நிர்வகிக்கும் விசேட சட்டங்கள் (personal laws) உள்ளன. இவ் விசேட சட்டங்கள் மத, கலாச்சார மற்றும் இன மரபுகளின் செல்வாக்கை பெற்றவை. இந்த சட்டங்கள் ஒவ்வொரு சமூகத்தின் தேவைகளை பூர்த்தி செய்து வந்தாலும், சமீபத்திய சமூக மற்றும் கலாச்சார மாற்றங்கள் சில பகுதிகளில் சீர்திருத்தம் அவசியம் என்பதைக் காட்டுகின்றன.

இலங்கையின் சமூகத்திற்குரிய இந்நிலை பரிணாமமடைந்து வரும் சூழலில், சில விசேட சட்டங்களில் காணப்படும் விதிமுறைகள் பழமையானவையாக காணப்படுகின்றன மற்றும் இவை இன்றைய சமூக மதிப்பீடுகளுக்கு ஏற்பவையல்ல. ஆதலால், இந்நியாயம், சமத்துவம் மற்றும் மனித உரிமைகளை காக்கும் வகையில், சட்டம் தற்போதைய சமூக மாற்றங்களுக்கு ஏற்ப மாற வேண்டிய அவசியம் உள்ளது.

மேற் கூறப்பட்ட கூற்றின் அடிப்படையில், இலங்கையின் விசேட சட்டங்களில் உடனடி மாற்றம் தேவைப்படும் மூன்று முக்கிய பிரச்சினைகளை பகுப்பாய்வு செய்க.

உங்கள் விடையை தொடர்புடைய சட்டப்பிரிவுகள் மற்றும் வழக்கு உதாரணங்களை பயன்படுத்தி விளக்குக.

(20 புள்ளிகள்)

4. பிரியந்த மாத்தளையில் அமைந்துள்ள வலயக் கல்வி அலுவலகத்தில் பணியாற்றும் கல்வி பணிப்பாளர் ஆவார். அவர் கம்பளை மாவட்டத்தை சேர்ந்த பாரம்பரிய கண்டிய விவசாயியான கிரிபண்டா மற்றும் ஆரம்பத்தில் அம்பலாங்கொடையைச் சேர்ந்த சந்திராணியின் ஒரே மகனாவார். கிரிபண்டா மற்றும் சந்திராணி 1948 ஆம் ஆண்டில் கண்டிய சட்டத்தின் கீழ் திருமணம் செய்துகொண்டனர்.

பணியாற்றும் இடமான மாத்தளையில், பிரியந்த தேசிய கல்லூரியில் அறிவியல் ஆசிரியை ஆக பணியாற்றும் செனுரியை சந்தித்தார். இரண்டு ஆண்டுகள் நெருக்கமான உறவிலிருந்த பின்னர், அவர்கள் திருமணம் செய்ய முடிவு செய்தனர். செனுரியின் குடும்பம் நுகேகொடாவைச் சேர்ந்தது. அவளது பெற்றோர் பொதுச் சட்டத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் கண்டியர்கள் ஆவர்.

திருமணத்திற்கு அருகிலான நிலையில், இரு குடும்பங்களும் திருமணத்தை எந்த சட்ட அடிப்படையில் பதிவு செய்ய வேண்டும் என்ற விவாதத்தில் ஈடுபட்டனர். பிரியந்தாவின் பெற்றோர், தங்கள் பாரம்பரியத்தையும் குடும்ப அடையாளத்தையும் காக்கும் வகையில் திருமணத்தை கண்டிய சட்டத்தின் கீழ் பதிவு செய்ய வேண்டுமென்று வலியுறுத்துகின்றனர். இதற்கு மாறாக, செனுரியின் பெற்றோர் தங்கள் குடும்பத்தில் கண்டிய வழக்காறு இல்லாததால் பொதுச் திருமண சட்டத்தின் கீழ் பதிவு செய்யவேண்டும் என்பதோடு, அந்த சட்டம் புதுமையுடனும் இருப்பதாக கருதுகின்றனர்.

பிரியந்தா மற்றும் செனுரி தங்கள் திருமணத்தை கண்டிய சட்டத்தின் கீழ் பதிவு செய்வதற்கான சாத்தியமுள்ளதா என்பதைக் தெரிந்துகொள்ள விரும்புகின்றனர்.

அ) அவர்களின் திருமணத்தை கண்டிய சட்டத்தின் கீழ் பதிவு செய்யும் சாத்தியத்தை விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ) 1948 இல், பிரியந்தாவின் தந்தை கீழ்நாட்டு சிங்களவராகவும், தாய் ஒரு கண்டிய பெண்ணாகவும் இருந்தால், அவர்கள் பின்ன (Binna) திருமணத்தில் ஈடுபட்டிருந்தால், பகுதி (அ) இல் உள்ள உங்கள் விடை மாறுமா?

(10 புள்ளிகள்)

5. இலங்கையில் விசேட சட்டங்கள் பிரயோகிக்கப்படுவது தொடர்பான பின்வரும் முக்கிய வழக்குகளுள் ஏதேனும் இரண்டு வழக்குகளைத் தேர்ந்தெடுங்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு வழக்கிற்கும், அதனுடன் தொடர்புடைய சூழ்நிலைகள் (facts), சட்டப் பிரச்சனைகள் (legal issues), மற்றும் தீர்ப்பில் வழங்கப்பட்ட முக்கியமான *சட்டக் கொள்கை* (*ratio decidendi*) பற்றிய விளக்கத்தை வழங்குக.

அ) *Natalie Manel Abeysundara v Christopher Abeysundara (1988) 1 SLR 185*

ஆ) *Williams v Robertson (1886) 8 SCC 36*

இ) *Sivagnanalingam v Sunetheralingam (1988) 1 SLR 86*

ஈ) *Abdul Carder v Rasik (1950) 52 NLR 156*

(10 × 2 = 20 புள்ளிகள்)

6. கணேஷ், 1970 ஆம் ஆண்டு திருகோணமலையில் வசித்த தமிழ் பெற்றோருக்கு பிறந்தார். அவனுக்கு ஐந்து வயதானபோது, அவனது குடும்பம் யாழ்ப்பாணத்திற்கு இடம்பெயர்ந்தது. அங்கு அவன் தன் ஆரம்ப மற்றும் உயர்நிலை கல்வியை பெற்றான். பள்ளி முடித்து 18வது வயதில், கணேஷ் யாழ்ப்பாணத்தில் தங்கினான் மற்றும் தந்தையின் சகோதரரின் விவசாயத்தில்பணிபுரிந்தாரன்.

1995 இல், கணேஷ் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் பெண்ணான ராதாவை திருமணம் செய்து கொண்டான். அவர்கள் இருவரும் விவசாயத்தில் வேலை செய்து, அங்குள்ள வீட்டில் வாழ்ந்தனர். 2001இல், ராதா திடீரென இறந்ததின் பின்னர், கணேஷ் கண்டிக்கு இடம்பெயர்ந்து, ஒரு தேயிலை தோட்டத்தில் வேலை பெற்றான். 2002இல், அவர் அதே தோட்டத்தில் வேலை செய்த கமலினியை திருமணம் செய்து கொண்டார். திருமணத்தின் பின்னர், அவர்கள் கண்டியில் வாழ்ந்தனர்.

2003இல், கணேஷ் யாழ்ப்பாணத்தில் ஒரு வீட்டை வாங்கி, தனது வயது முதிய பெற்றோர்களை அங்கு வாழ அழைத்தான். அவனது விருப்பம் யாழ்ப்பாணத்தில் நிரந்தரமாக வாழ்வதாக தனது பெற்றோரிடம் தெரிவித்தார்.

ஆனால் 2006 இல், யாழ்ப்பாணத்திற்கு திரும்பும் முன்பே அவர் திடீரென உயிரிழந்தான்.

இப்போது கமலினி கணேஷ் தேச வழமைச் சட்டத்தின்படி ஆட்பட்டவரா அல்லது பொதுச் சட்டத்தின்படியா ஆட்பட்டவரா என்பதை பற்றிய ஆலோசனையை நாடுகிறார்.

உங்கள் விடையை உரிய சட்டப்பிரிவுகள் மற்றும் வழக்குத் தீர்ப்புகளுடன் விளக்குக.

(20 புள்ளிகள்)

7. "... இந்த சட்டங்கள் (பட்டாவியா சட்டங்கள்) ஹோலந்தின் சட்டவியலின் மாற்றி மற்றும் திருத்தி, கம்பனியின் ஆட்சியை இந்நாட்டு மக்கள் உணர்வோடு ஒத்துப்போகச்செய்ய முயன்றன."

— *Karonchihamy v Angohamy 8 N.L.R. 1*

உரோமன் டச்சுச் சட்டத்தின் ஆட்சி காலத்தில் இலங்கையில் பட்டாவியா சட்டங்கள் எவ்வாறு ஏற்கப்பட்டன என்பதை விவாதிக்கவும்.

(20 புள்ளிகள்)

8. கீழே தரப்பட்டவற்றில் **ஏதேனும் இரண்டினைப்** (02) பற்றி சிறுகுறிப்பு வரைக.

அ) 1833 - 1947 காலப்பகுதியில் இலங்கையில் நிர்வாக முறைமை

ஆ) கண்டிய சட்டத்தில் சமகால வளர்ச்சிகள்

இ) காலணித்துவத்திற்கு முதற்பட்ட காலப் பகுதியில் இலங்கையில் நிர்வாக முறைமை

ஈ) சுதந்திரத்திற்குப் பிந்தைய காலத்தில் நீதிமன்ற அமைப்பிலும், நீதிக்கான நிர்வாகத்திலும் ஏற்பட்ட முக்கிய மாற்றங்கள்

(10×2 = 20 புள்ளிகள்)

*** *பதிப்புரிமை பெற்றது* ***